செ.வெ.எண்: 808/2016 நாள்: 18.11.2016

**பத்திரிக்கைச் செய்தி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் வாயிலாக தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கு பராமரிப்பு உதவித்தொகை மாதந்தோறும் ரூ1500.00 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் மேற்குறிப்பிட்ட வகைகுறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகள் விண்ணபத்துடன் மாற்றுதிறனாளி தேசிய அடையாள அட்டை நகல் குடும்ப அட்டை நகல் தங்கள் பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலரிடம் வேறு எந்த துறையிலும் மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படவில்லை என்ற சான்றுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் வாயிலாக அல்லது வேறு எந்த துறை வாயிலாக பயனடைந்திருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் தசை சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மரபணு பரிசோதனை முகாம் விரைவில் நடைபெறவுள்ளது. இது தொடர்பாக தங்களது முழு விவரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலவலகத்தில் (கூடுதல் தகவல்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் **04652 279411**) பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சி தலைவர்(பொ)
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**